

கேரள மாநிலத்தில் இரயில் மோதிய விபத்தில் கடந்த 02.11.2024 அன்று உயிரிழந்த சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த தூய்மைப் பணியாளர்களின் குடும்பத்தினருக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த தலா ரூ.3 இலட்சம் நிவாரண நிதியுதவிக்கான காசோலைகளை சேலம், ஆச்சாங்குட்டப்பட்டியில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் 04.11.2024 அன்று வழங்கி ஆறுதல் தெரிவித்தார்கள். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே. மலையரசன் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.



விழுப்புரம் தெற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் ம.ஜெயச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி கலந்துகொண்டு வருகிற நவம்பர் 5, 6 தேதிகளில் விழுப்புரம் மாவட்டத்திற்கு பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு வருகை தரும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு சிறப்பான, எழுச்சியான வரவேற்பு அளிப்பது குறித்து ஆலோசனைகள் வழங்கினார். சட்டமன்ற உறுப்பினர்கள் அன்னியூர்.அ.சிவா, டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.என்.முருகன், தயா இளந்திரையன், இரா கற்பகம், மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் மு.தங்கம், நகரச் செயலாளர் இரா.சக்கரை, கோபிகிருஷ்ணன், ஒன்றிய செயலாளர்கள் க.மும்மூர்த்தி, பி. தெய்வசிகாமணி, தே முருகவேல், கல்பட்டு வி ராஜா, வி.ஜி.பிரபாகரன், ஜி.ரவிச்சந்திரன் அ.சா.ஏ.பிரபு, பி.வி.ஆர் சு விசுவநாதன், பி.கே.டி.முரளி, வே.கணேசன், கு.செல்வமணி, கிளியனூர் ராஜி, மைதிலி ராஜேந்திரன், ஜெய.ரவிதுரை, வேம்பி ரவி, ஜெ.ஜெயபால், பிரேமா அல்போன்ஸ், ஆர் முருகன் ஆர்.பி.முருகன், பேரூர் செயலாளர்கள் பா.ஜீவா, பூக்கடை கணேசன், நைனா முகம்மது, சுந்தரமூர்த்தி பேரூராட்சி மன்றத் தலைவர் அப்துல் சலாம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### ‘அழைப்பு ஏற்பாளர்’ பணிக்கு தவறுதலாக அறிவிக்கை வெளியிட்ட இணை இயக்குநர் பணியிடை நீக்கம்’

# தமிழ் குறித்து எவரும் எங்களுக்கு பாடம் எடுக்க வேண்டாம்!

## சமூக நலத்துறை அமைச்சர் பி.கீதா ஜீவன் அறிக்கை!



சென்னை, நவ. 6 -

‘அழைப்பு ஏற்பாளர்’ பணிக்கு தவறுதலாக அறிவிக்கை வெளியிட்ட இணை இயக்குநர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்றும், தமிழ் குறித்து எங்களுக்கு எவரும் பாடம் எடுக்க வேண்டாம் என்றும் சமூக நலத்துறை அமைச்சர் பி.கீதா ஜீவன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன் அவர்களின் அறிக்கை வருமாறு:-

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் இயங்கும், சமூக நல ஆணையரகம் மூலம் பாதிப்புக்கு உள்ளாகும் மகளிருக்கு உதவிட பெண்களுக்கான கட்டுப்பாட்டு மையம், “மகளிர் உதவி எண்.181” சென்னையில் செயல்பட்டு வருகிறது. மகளிர் உதவி எண்.181 பணியிடத்தில் ஏற்பட்டுள்ள காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்பிடும் பொருட்டு, விண்ணப்பங்கள் பெற்றிட tn.gov.in என்ற இணையதளத்தில் ஆட்சேர்ப்புக்கான அறிவிக்கை, சமூக நல ஆணையரக இணை இயக்குநரால் பதிவேற்றம் செய்யப்பட்டது. அதில் “அழைப்பு ஏற்பாளர்” (Call Responders) என்று குறிப்பிடப்பட்டுள்ள பணியிடத்திற்கு தேவையான தகுதிகள் என தமிழ், ஆங்கிலம் மற்றும் இந்தி என தவறுதலாக பதிவேற்றம் செய்யப்பட்டது.

இந்த ஆட்சேர்ப்புக்கான அறிவிக்கை தமிழ்நாடு அரசின் கவனத்திற்கு வந்தவுடன், அவ்விளம்பரம் உடனடியாக இணையதளத்தில் இருந்து நீக்கப்பட்டு, தமிழ் மற்றும் ஆங்கிலம் தெரிந்த நபர்கள் விண்ணப்பிக்கலாம் என்று திருத்தப்பட்ட ஆட்சேர்ப்பு அறிவிக்கை உடனடியாக பதிவேற்றம் செய்யப்பட்டது.

**தமிழ் மொழியினை உயிருக்கு மேலாய் மதிக்கும் முதல்வர்!**

மேலும், தவறுதலாக இணையத்தில் பதிவேற்றம் செய்த இணை இயக்குநர் உடனடியாக பணியிடை நீக்கம் செய்யப்பட்டு, அவர் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தாய்மொழியாம் தமிழ் மொழியினை உயிருக்கும் மேலாய் மதிக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் எங்கள் முதலமைச்சர் அவர்கள் தலைமையில், அனைத்து அரசுத் துறைகளிலும் தமிழ் மட்டுமே முக்கிய மொழியாக உள்ளது. மாண்பமை நீதிமன்றம், ஒன்றிய அரசுடனான கடிதப் போக்குவரத்து போன்றவற்றிற்கு மட்டுமே ஆங்கிலம் பயன்படுத்தப்படுகிறது.

தமிழ்த்தாய் வாழ்த்து, அய்யன் திருவள்ளுவருக்கு வள்ளுவர் கோட்டமும், 133 அடியில் வானுயர சிலையும் அமைத்தது, உலகத் தமிழ் மாநாடு நடத்தியது, தமிழுக்கு செம்மொழி சிறப்பு பெற்றுத் தந்தது என எண்ணிலடங்கா பெருமைகள் கொண்டது தான் திராவிட முன்னேற்றக் கழக வரலாறு. தமிழர் பெருமை கூறும் கீழடி அருங்காட்சியகம் அமைத்து, உலகத்தின் பார்வையை நம் மீது திருப்பியது அண்மைக் கால வரலாறு. மேலும், அரசுப்பணிகளில் தமிழ் மொழியில் பயின்றவருக்கு முன்னுரிமை அளித்து அரசாணை வெளியிட்ட அரசு, நமது திராவிட மாடல் அரசு. தமிழ்நாடு அரசுத் துறைகளில் உள்ள பணியிடங்கள் மற்றும் மாநில பொதுத்துறை நிறுவனங்களில் உள்ள பணியிடங்கள் அனைத்திலும் தமிழ்நாட்டு இளைஞர்களை 100 சதவீதம் நியமனம் செய்யும் பொருட்டு, தேர்வு முகமைகளால் நடத்தப்படும், அனைத்து போட்டித் தேர்வுகளிலும் தமிழ் மொழி பாடத்தாள் தகுதித் தேர்வாக கட்டாயமாக்கப்பட்டது என தமிழ்மொழி வளர்ச்சிக்கான இவ்வரசின் பல்வேறு சாதனைகளை பட்டியலிட்டுக் கொண்டே போகலாம்.

ஒரு அரசு அலுவலர் செய்த தவறை வைத்துக் கொண்டு அரசியல் செய்யும் நிலையில் சிலர் உள்ளதைப் பார்த்தால் பரிதாபமாக உள்ளது.

தமிழ் குறித்து எங்களுக்கு எவரும் பாடம் எடுத்து கூச்சல் போட வேண்டியதில்லை. இதனால் மக்கள் ஏமாறப் போவதில்லை.

நமது முதலமைச்சர் அவர்கள் ஆட்சியில், தமிழ் மொழி மென்மேலும் சிறப்புகள் பெற்று வளர்ந்து வருகிறது. இதனைக் காண சகிக்காதவர்கள் தான் இப்போது கூக்குரல் இடுகிறார்கள். அதனை புறம் தள்ளி, எங்கள் தாய்மொழியாம் தமிழ் வழி பயணத்தை சிறப்புற தொடர்வோம்.

இவ்வாறு அமைச்சர் கீதா ஜீவன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தருமபுரி கிழக்கு மாவட்டம் நாகமரை ஊராட்சிக்கு உட்பட்ட ஏமனூரில் கழக முன்னாள் மாவட்ட கழக செயலாளர் முன்னாள் எம் எல் ஏ பி.என்.பி இன்பசேகரன் தலைமையில்,ஏரியூர் ஒன்றிய செயலாளர் செல்வராஜ் முன்னிலையில் நடைபெற்ற விழாவில், அஜ்ஜனஅள்ளி, சுஞ்சல்நத்தம்,இராம கொண்டஅள்ளி, மஞ்சாரஅள்ளி, பத்திரஅள்ளி, நாகமரை உள்ளிட்ட ஊராட்சிகளில் இருந்து பல்வேறு கட்சிகளில் இருந்து விலகி 200க்கும் மேற்பட்ட இளைஞர்கள் திமுகவில் இணைந்தனர். இந்த இணைப்பு விழா ஏற்பாடுகளை பொறியாளர். திவாகர், செய்திருந்தார். நிகழ்வில் பென்னாகரம் ஒன்றிய செயலாளர் முருகேசன்,ஒன்றிய துணை செயலாளர் சம்பத்குமார், நகைக்கடை நஞ்சப்பன், சேலம் ஓட்டல் வினுஅன்பழகன், உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



நாகை மாவட்டம் நாகை நகர வாக்குச்சாவடி முகவர்கள் (எ.எல்.ஏ.2) கூட்டம் நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என். கௌதமன் பேசினார். உடன் நாகை சட்ட மன்ற தொகுதி பார்வையாளரும், தாட்கோ தலைவருமான உ.மதிவாணன், நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து, மாவட்டக் கழக பொருளாளர் மு.லோகநாதன், பொதுக்குழு உறுப்பினர் கே.பாண்டியன், நகர கழக நிர்வாகிகள் இரா.முருகையன், அபுபக்கர், வெற்றலைகடைசிவா, பி.திலகர், ஆர்.ஆர்.ரமணி மற்றும் பலர் உள்ளனர்.

## ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி ஆலோசனைக் கூட்டம்!

சென்னை, நவ. 6 -

ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதிச் செயலாளர் மா. பா.அன்புதுரை விடுத்துள்ள அறிக்கை வருமாறு :

மாவட்ட கழகச் செயலாளர் நே.சிற்றரசு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் நாகநாதன், ஆயிரம் விளக்கு தொகுதி பார்வையாளர் கௌதமன் பங்கேற்கும் ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி வட்டச் செயலாளர்கள் கூட்டம் இன்று (6-11-2024 - புதன் கிழமை) மாலை 6:00 மணியளவில் இளங்கோ சாலையில் அமைந்துள்ள பகுதி கழக அலுவலகத்தில் பகுதி அவைத்தலைவர் எம்.ஆர். ஜம்புலிங்கம் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் நாகநாதன், ஆயிரம் விளக்கு தொகுதி பார்வையாளர் கௌதமன் ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கிறார்கள்.

எனவே இக்கூட்டத்திற்கு பகுதி கழக நிர்வாகிகள் வட்ட கழக செயலாளர்கள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோது துணை முதல்வர் - இளைய தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழா, வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு மற்றும் கழக ஆக்க பணிகள் குறித்து ஆலோசிக்கப்படவிருக்கிறது.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### கழக இளைஞரணி நடத்திய

# பேச்சுப்போட்டிகளில் அறிவாயுத இளைஞர்களின் அணிவகுப்பு!

**கடலூர் இள.புகழேந்தி**
கழக தேர்தல் பணிக்குழுச் செயலாளர்



“என் உயிரினும் மேலான” என்ற தலைப்பில் தமிழ்நாடு முழுவதும் வெற்றிகரமாக நடந்து முடிந்திருக்கிற கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டிகள் அறிவு புரட்சியின் அடையாளமாக வரலாற்றில் இடம் பெற்று இருக்கிறது.

கழகத் தலைவர் முதல்வர் அண்ணன் தளபதி அவர்களின் ஆணையேற்று இளைஞர் அணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சிறப்பான நிர்வாகத்தின் காரணமாக இப்போட்டிகள் மாபெரும் வெற்றியை ஈட்டின .

கழகம், போட்டிகளை அறிவித்த உடனேயே அலை கடலென மாணவர்கள் விண்ணப்பிக்க தொடங்கினர். அதுவும் நகரங்களோடு போட்டி போடும் வகையில் கிராமங்களிருந்து சாமானிய குடும்பங்களைச் சேர்ந்த ஏழை எளிய மாணவர்கள் விண்ணப்பித்து இருந்தது திராவிட இயக்கத்தின் வேர் இந்த மண்ணில் ஆழ வேரோடி இருப்பதற்கான அத்தாட்சியாக அமைந்தது.

எனக்கும் நடுவராக பணிபுரியும் நல்வாய்ப்பினை மாண்பிற்குரிய தலைவரும் இளைஞரணி செயலரும் வழங்கினார்கள். அதன்படி நான், தூத்துக்குடி ,காஞ்சிபுரம், திருவண்ணாமலை, மயிலாடுதுறை, செங்கல்பட்டு (வண்டலூர்) ஆகிய மாவட்டங்களில் நடுவராக பணியாற்றினேன்.

வருங்கால தமிழ்நாட்டிற்கு அறிவாயுதங்களை தயாரிக்கும் உன்னத பணியல்லவா இது. திராவிட இயக்கத்திற்கு விதைகளை தயாரிக்கும் பாசறை நிகழ்வுகளல்லவா இப்போட்டிகள்.

கொள்கை உறுதியும், ஆற்றலும், செயல் திறனும் உடைய ஆயிரக்கணக்கான இளைஞர்களை உருவாக்குவதல்லவா பேச்சுப்போட்டிகளின் இலக்கு.

**முதற்கட்ட பேரலை**

ஆர்வத்தோடு விண்ணப்பித்தவர்கள் தங்கள் முழு திறமைகளையும் வெளிப்படுத்தினர். காலத்தால் அழியாத மாபெரும் தலைவர் கலைஞர் அவர்களைப் பற்றியும். கழகத் தலைவர் திராவிட மாடல் ஆட்சியை நாடு போற்ற நடத்திக் கொண்டிருக்கிற தளபதி அவர்களின் ஆட்சி மாண்பினை பற்றியும் தமிழகத்தின் எதிர்காலம் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் கைகளில் பாதுகாப்பாக இருக்கிறது என்கிற உணர்வையும் அவர்கள் வெளிப்படுத்தினர்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது மாணவ – மாணவியர் வைத்திருக்கிற பேரன்பை இதன் மூலம் உணர முடிந்தது. நிறைவு போட்டிகளில் கலந்து கொள்ள 913 மாணவ வீரர்களும் வீராங்கனைகளும் தேர்வு செய்யப்பட்டனர்.

மிகப்பெரும் ஆர்வத்தோடு போட்டிகளில் பங்கேற்ற மாணவர்கள் இளைஞர்களை கண்டு மகிழ்வடைந்தோம். அவர்களில் பலர் இயக்கக் குடும்பத்து பிள்ளைகள். அவர்களோடு எண்ணற்ற புதிய இளைஞர்களாவர்கள். திராவிட மாடலின் ஈர்ப்பு விசையின் வல்லமையை எங்களால் காணமுடிந்தது.

இயக்க வரலாற்றை நுணுக்கமாக படித்து வந்து பேசினார்கள். போட்டியில் வெல்ல வேண்டும் என்ற தணியாத தாகத்தோடு திசைகளை அதிரச்செய்தார்கள்.

நினைத்துப் பார்க்கிறேன் இப்படிப்பட்ட போட்டிகள் இல்லையென்றால் திராவிடத்தை பற்றி திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றி மேலோட்ட பார்வை தான் இளைஞர்களுக்கு மாணவ – மாணவியர்களுக்கு இருந்திருக்கும்.

போட்டிகளில் பங்கேற்ற மாணவர் மாணவியர் ஒவ்வொருவரும் 100 பேருக்கு இணையானவர்களாகவே எங்களுக்கு தெரிந்தனர்.

காரணம் இந்த வயதிலேயே அவர்களின் வாசிப்புத் திறன், வெல்லும் திராவிட வரலாற்றின் மீதான பற்று, பேச்சாற்றல் அத்தனையும் ஒருங்கே வெளிப்படுத்திய விதம் தான். அது மட்டுமன்றி இப்போட்டிகள் குறித்து ஒவ்வொருவரும் தங்கள் நண்பர்கள் குழாம்களுக்கும் உறவுகளுக்கும் சொல்லி அவர்களையும் பங்கேற்கச் செய்த மனப்பாங்கு அவர்கள் ஒவ்வொருவரையும் 100 பேராக பார்க்கச் செய்தது.

இப்போட்டிகள் மூலம் நம்முடைய மானமிகு இளைஞர் அணி செயலாளரும் துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள்

வரும் தலைமுறையின் உள்ளத்து உணர்வுகளை தட்டிக்கொடுத்து அவர்களை இயக்க வரலாறுகளை பயில வைத்து பிரச்சாரத்திறன் உள்ளவர்களாகவும் அவர்களை உருவாக்கியுள்ளார். இது நம்முடைய தலைவர் தளபதியினுடைய உள்ளத்தை மகிழ்வடைய செய்திருக்கும்.

**சமத்துவம்**
**சமூக நீதி**
**அனைவருக்கும் அனைத்தும்**
**பெண்ணுரிமை**
**பெண் கல்வி**
**பகுத்தறிவு சிந்தனைகள்**

இவற்றையெல்லாம் சிறப்பாக உள் வாங்கி மாணவர்கள் அதனை தங்கள் உரைவீச்சில் வெளிப்படுத்தினர்.

தமிழ் மக்களின் மீதான அடிமை விலங்குகளை அறுத்தெறிந்து அவர்களுக்கான உரிமைகளை போராடி பெற்றுத் தந்து, வெளிச்சத்தை புது விடியலை உருவாக்கி தந்தது திராவிட பேரியக்கம் அந்த திராவிட பேரியக்கத்தின் அரசியல் வடிவமே திராவிட முன்னேற்றக் கழகம் என்று மாணவர்கள் பேசியது உயிரை சிலிர்க்க வைத்தது.. இன்னும் ஆயிரம் ஆண்டுகளுக்கு நம் கழகத்தை தொட்டுப்பார்க்க யாராலும் முடியாது என்ற உறுதியான உணர்வை மாணவர்கள் தந்துள்ளனர்.

பேச்சுப்போட்டிகள் எதற்காக நடத்தப்பட்டதோ அதற்கான இலக்கை 100 க்கு 100 சதவீதம் வென்றிருக்கிறது. கொள்கை திறன் மிக்க நம் தலைவர் முதல்வர் அவர்களின் எண்ணப்படி நம் துணை முதல்வர் அவர்கள் இதனை சாதித்து காட்டியுள்ளார்.

வலுவான திராவிட கட்டுமானத்தை மென்மேலும் உறுதிப்படுத்திட துணை முதல்வர் இளைஞர்களின் நம்பிக்கை நாயகர் உதயநிதி ஸ்டாலின் இது போன்ற ஒவ்வொரு முன்னெடுப்புகளையும் எடுத்து வருகிறார்.

இதன் மூலம் திராவிட இயக்கம் அடுத்த நூற்றாண்டை நோக்கி வெற்றிகரமாக தன் பயணத்தை தொடங்கி இருக்கிறது என்று உறுதியாக குறிப்பிடுகிறேன். பாதையை வகுத்தது தலைவர் முதல்வர் தளபதி அந்தப் பாதையில் அனைவரையும் அழைத்துக் கொண்டு வீறு நடை போடுவது நம்முடைய இளம் தலைமுறைக்கு ஏற்ற திறன்மிகு துணை முதல்வர் அவர்கள்.

அவர் இந்த பேச்சுப்போட்டிகளுக்கு அளித்திருந்த தலைப்புகள் இளைஞர்களின் எண்ணங்களில் விதைகளாக ஊன்றப்பட்டுள்ளன.

தலைப்புகளை ஆழமாக சிந்தித்துப் பார்த்தால் இந்த உண்மை தெளிவாக புரியும்.

**தலைப்புக்கள்**

**1. என்றென்றும் பெரியார் ஏன் ?**
**2. அண்ணாவும் மாநில சுயாட்சியும்**
**3. கலைஞர் நவீன தமிழ்நாட்டின் சிற்பி**
**4. திராவிட மாடல் நாயகர் மு க ஸ்டாலின்**
**5. தமிழ்நாட்டு குடும்பங்களில் திமுக**

இந்த தலைப்புகளில் அற்புதமாக இளைஞர்கள் பேசினார்கள். பேச்சாளர்களுக்கு உரிய பாணியில் பேசி ஆச்சரியம் அளித்தார்கள். சிலர் மனப்பாடம் செய்து வேகமாக பேசி முயன்ற வரை முயற்சித்தார்கள்.

எது எப்படியாயினும் கழகத்தின் நோக்கம் நிறைவேறியது. பேசியவர்களிடமிருந்து தன்னம்பிக்கை, விடாமுயற்சி, துணிவு, வெற்றி ஆகியன வெளிப்பட்டன.

பேசியவர்களின் உள்ளமெல்லாம் நினைவெல்லாம் பெரியார், அண்ணா, கலைஞர், திராவிட மாடல் தலைவர் அண்ணன் தளபதி ஏன் இயக்கத்திற்கு பாடுபட்டுக் கொண்டிருக்கிற துணை முதல்வர் ஆகியோரின் பெரும் பணிகளும் போராட்டங்களும், வெற்றிச் சாதனைகளும் நிறைந்திருந்ததை அவர்களின் உரை முழக்கத்தில் கண்டு மகிழ்ந்தோம். இதுதான் இயக்கத்தின் தலையாய இயக்கப் பணி நம் கழகம், சமுதாய அரசியல் சீர்திருத்த இயக்கம் இந்த பேச்சுப் போட்டியில் கலந்து கொண்ட நாமக்கல் மாணவி சுதர்சனா தனி கவனம் ஈர்த்தார்.

“ கலைஞரால் தலைகுனிந்த தமிழகம் “ என்று சிலர் சொல்வதை ஏற்றுக் கொள்வதாக குறிப்பிட்ட அவர் தன் பேச்சில், “ கலைஞர் எங்களை தலைகுனிய வைத்தார். ஆண்டவன் படைப்பில் அனைவரும் சமம் எனில் உயர் சாதிக்கு மட்டும் தங்கத்தால் மூளை செய்து வைத்தானா ? மற்ற சாதிக்கெல்லாம் மண்டைக்குள் இருப்பது என்ன களிமண்ணா ? சுண்ணாம்பா ? என ஆண்டாண்டு காலமாக ஒடுக்கப்பட்டவர்களுக்காக குரல் கொடுத்தார் கலைஞர் அவர்கள் கையில் புத்தகத்தை கொடுத்து படிப்பதற்காக தலைகுனிய வைத்தார். காலம் தந்த மகத்தான தலைவர் கலைஞரால் தான் நாங்கள் இன்று தலை நிமிர்ந்து நிற்கிறோம் “ என்று பேசி வியக்க வைத்தார்.

இதுதான் திராவிட மாடல் சாதனை மகுடம் இதுதான் கலைஞர் ஸ்டைல் பதிலடியாகும் என தளபதி மகிழ்ந்து குறிப்பிட்டார்.

பேச்சு போராளிகளாக 182 பேரை உருவாக்கி இயக்கத்திற்கு கொடுத்துள்ளார் மானமிகு இளைஞர் அணி செயலாளர் இது அவர் திராவிட இயக்கத்திற்கு தந்த அறிவார்ந்த மாபெரும் நன்கொடையாகும்

பட்டித் தொட்டியெங்கும் பேசிப் பேசி வளர்ந்த இயக்கம் திமுக. அதனால் தான் நாட்டில் வறுமை, அறியாமை இருளை விரட்டியடித்து மக்களின் வாழ்வில் மகிழ்ச்சி ஒளியை ஏற்ற முடிந்தது. இதனை நிலை நிறுத்த திராவிட மாடல் அரசு காலத்தின் தேவை என்பதை மாணவர்கள் அனைவரும் இப்போட்டிகளின் வாயிலாக உணர்ந்து கொண்டனர்.

இப்படிப்பட்ட பேச்சுப் போட்டிகளோடு படைப்பாற்றல், எழுத்தாற்றல் ஆகியவற்றையும் இயக்க வளர்ச்சிக்கும் திராவிட பாதுகாப்புக்கும் பயன்படும் வகையில் அவற்றிற்கும் போட்டிகள் நடத்தப்பட வேண்டுமென்பது இளைஞர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. முதல்வர் தலைவர் அவர்களும் துணை முதல்வர் அவர்களும் மாணவர்கள் இளைஞர்களின் நலன் முன்னேற்றத்திற்காக மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள்

காலம் உள்ளளவும் திராவிட இயக்க வரலாறாக மாறும். இதுவே இயக்கத்தின் இயக்கம்.